நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் மன்றத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி மன்றத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நம்புகின்றேன்.

**1.4 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

AGDSL
විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
Auditor General's Department

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து முதியோர்களிற்கான தேசிய மன்றத்தின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டில் நிதிக்கூற்றுக்களில் பணிக்கொடைக்கான நிதிஏற்பாடு ரூபா 262,792 தொகை அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) கதிர்காமம் சுற்றுலா விடுதியை அபிவிருத்தி செய்தல் மற்றும் தோட்ட அலங்காரங்களுக்காக மொனரகாலை பிரதேச செயலாளருக்கு அனுப்பப்பட்ட ரூபா 4,712,391 தொகை நடைமுறை வேலையின் கீழ் கணக்கீடு செய்வதற்குப் பதிலாக கட்டிடங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டமையால் கட்டிடத்தின் பெறுமதி ரூபா 4,712,391 இனாலும் பெறுமானத்தேய்வு ரூபா 188,496 இனாலும் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) மன்றத்திற்குரிய கதிர்காமம் முதியோர் இல்லம், கதிர்காமம் சுற்றுலா விடுதி, மானிகாதென்ன முதியோர் இல்லாம் மற்றும் நிவித்திகல நில்வளா செவன ஊனமுற்றோர் நிலையத்திற்குரிய காணி மற்றும் கட்டிடங்கள் மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பிரதேச செயலகத்திற்கு நிதியினை வழங்கும் சந்தர்ப்பத்தில் அவற்றை முற்பணமாக கணக்கீடு செய்வதற்குப் பதிலாக செலவினமாகப் பதியப்பட்டமையின் காரணமாக முன்னைய ஆண்டின் போது அவ்வாறு வழங்கப்பட்ட தொகையில் செலவிடப்படாமல் மீள அனுப்பப்பட்ட ரூபா 801,455 தொகை மீளாய்வாண்டின் போது மன்றத்தின் வருமானமாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

3

(உ) நானாவித வைப்பு நிதியத்திலிருந்து கணனி மற்றும் துணைப்பாகங்களைக் கொள்வனவு செய்வதற்கு மீளாய்வாண்டின் போது ரூபா 3,266,010 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 653,202 தொகையான பெறுமானத்தேய்வு பிழையாக திறைசேரி மானியக் கணக்கில் வரவு வைத்து பிற்போட்ட வருமானமாக வருமானத்தில் செலவு வைக்கப்பட்டிருந்தது.

**2.2.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

மீளாய்வாண்டின் போது மன்றத்தால் ஏனைய அரசாங்க நிறுவனங்களின் மூலமும் தனியார் நிறுவனங்களின் மூலமும் நடாத்தப்படுகின்ற 07 முதியோர் இல்லங்களை பழுதுபார்க்கும் நடவடிக்கைகளுக்காக ரூபா 8,023,224 வழங்கப்பட்டிருந்தது. எனினும் இந்த பழுதுபார்த்தல் நடவடிக்கைகளுக்காக செய்யப்பட்ட செலவினத்தை உறுதிப்படுத்துவதற்குரிய பட்டியல்கள் மற்றும் செயலாற்றல் அறிக்கை என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடன் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 2006 இன் அரசாங்க பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 4.3(அ) பந்தி | சகல தொடர்புடைய செலவினங்களையும் உள்ளடக்கிய மொத்தக் கிரய மதிப்பீடு தயாரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் மன்றத்தால் மீளாய்வாண்டில் அமுல்படுத்தப்பட்ட நிர்மாணங்கள் மற்றும் 4 கொள்வனவுகளுக்காக சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் மொத்தக் கிரய மதிப்பீடு தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2002 நவம்பர் 28 ஆந் திகதிய IAI/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | மன்றத்திற்குரிய ரூபா 10,472,700 பெறுமதியான கணனி, துணைப்பாகங்கள் மற்றும் மென்பொருள் என்பவற்றுக்காக நிலையான சொத்துப் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |

4

3. நிதி மீளாய்வு

3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, 2016 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான மன்றத்தின் நிதி விளைவுகள் ரூபா 816,530 மிகையாக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 2,378,580 ஆனமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 3,195,110 அதிகரிப்பைக் காண்பித்திருந்தது. மீளாய்வாண்டில் ஊழியர் ஊதியம் ரூபா 11,036,076 இனால் அதிகரித்திருந்த போதிலும் ஏனைய வருமானம் ரூபா 3,199,012 இனால் அதிகரித்தமை மற்றும் ஏனைய செயற்பாட்டுச் செலவினம் ரூபா 11,396,776 இனால் குறைவடைந்தமை மேற்கூறப்பட்ட அதிகரிப்பிற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 செயலாற்றல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

4.1.1 2000 இன் 09 ஆம் இலக்க முதியோர்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் பிரகாரம் நிறைவேற்ற வேண்டிய 16 நோக்கங்கள் காண்பிக்கப்பட்டிருந்த போதிலும் அதில் 09 மாத்திரம் செயல் நடவடிக்கைத் திட்டத்தின் படி நிறைவேற்றப்பட்டிருந்ததுடன் பின்வரும் 07 நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(அ) இலங்கையின் பாரம்பரிய மரபுகளின் அடிப்படையில் அமைந்த குடும்ப அலகினை வலுவூட்டுவதற்காக அரசு மற்றும் ஏனைய தகுதிவாய்ந்த நிறுவனங்களுக்கு நிகழ்ச்சித்திட்டங்களை பரிந்துரை செய்தல்.

(ஆ) முதியோர் தொடர்பில் சரியானதும் நாளதுவரையாக்கப்பட்டதுமான புள்ளிவிபரவியல் பதிவேடுகளைப் பேணுதல்.

(இ) முதியோர்களின் பிரச்சினைகளுக்கு தாக்கமளிக்கும் பிரதான காரணங்கள் மற்றும் அவர்களின் தேவைப்பாடுகள் மற்றும் அபிலாஷைகளை இனங்காணும் எண்ணத்துடன் கற்கைகள் மற்றும் ஆராய்ச்சிகளை மேம்படுத்தல் மற்றும் அந்த காரணங்களை ஒழித்தல் அல்லது

மாற்றியமைப்பதற்காகவும் அவர்களின் அந்த தேவைப்பாடுகள் மற்றும் அபிலாஷைகளை நிறைவேற்றுவதற்கும் தேவையான நடவடிக்கை எடுத்தல்.

(ஈ) முதியோர்களின் பிரச்சினைகள், தேவைப்பாடுகள் மற்றும் அபிலாஷைகள் தொடர்பில் பொது மக்களுக்கு அறிவூட்டுதல்

(உ) முதியோர்களின் நிலையை முன்னேற்றுவதற்காக அரசினாலும் தொண்டர் அமைப்புக்கள் மற்றும் தனிநபர் குழுக்களினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள செயற்பாட்டில் ஈடுபடுத்தப்படுகின்ற நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் உத்தேசத் திட்டங்களை ஆய்வு செய்தல் மற்றும் தொடர்புபடுத்தல்.

(ஊ) வயது முதிர்ந்தோருக்காக சுகாதாரக் காப்பீட்டு நலன் உத்தேசத் திட்டமொன்றை அறிமுகப்படுத்துதல் மற்றும் அமுல்படுத்துதல்.

(எ) முதியோர்கள் அறிந்து கொள்வதற்காக முதியோர்களுக்காக உள்ள சம்பளம் செலுத்தும் மற்றும் சம்பளமற்ற வேலைவாய்ப்புக்கள் தொடர்பில் பெயர்ப்பட்டியலொன்றை பேணிச் செல்லல் மற்றும் இயலுமான எல்லா சந்தர்ப்பங்களிலும் அவர்களுக்கு வருமானம் கிடைக்கும் சேவையொன்றில் ஈடுபடுவதற்கு உதவிபுரிதல் மற்றும் பொதுமக்கள் அறிந்து கொள்வதற்காக முதியோர்களின் ஆற்றல்கள் மற்றும் திறமைகளை உள்ளடக்கிய அவர்கள் தொடர்பான பெயர்ப்பட்டியலொன்றை பேணிச்செல்லல்.

4.1.2 செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த 09 நோக்கங்களுக்காக ரூபா 53,000,000 தொகையான நிதியேற்பாடு வழங்கப்பட்டிருந்ததுடன் அந்த நோக்கங்களை நிறைவேற்றுவதிலுள்ள செயன்முன்னேற்றம் பின்வருமாறாகும்.

**(அ) முதியோர் குழுக்களுக்கு நிதியுதவிகளை வழங்குதல்**

(i) மீளாய்வாண்டில் 340 கிராமிய முதியோர் குழுக்கள், 10 பிரதேச முதியோர் அதிகாரக் குழுக்கள், 04 மாவட்ட முதியோர் அதிகாரக் குழுக்கள் மற்றும் 04 மாகாண முதியோர் அதிகாரக் குழுக்கள் என்றவாறு 358 குழுக்களை ஸ்தாபிப்பதற்கு ரூபா 2,000,000 தொகை ஒதுக்கப்பட்டிருந்ததெனினும் 325 கிராமிய முதியோர் குழுக்கள், 03 பிரதேச முதியோர் அதிகாரக் குழுக்கள், 01 மாவட்ட முதியோர் அதிகாரக் குழு மற்றும் 02 மாகாண முதியோர் அதிகாரக் குழுக்கள் என்றவாறு 330 குழுக்கள் மாத்திரமே உண்மையாக ஸ்தாபிக்கப்பட்டிருந்தன. அந்த குழுக்களுக்காக ரூபா 1,696,500 தொகை செலவிடப்பட்டிருந்ததுடன் பணம் பெறப்பட்டமையை

உறுதிப்படுத்துவதற்காக அனுப்பப்பட்ட பற்றுச்சீட்டு கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும் குழுவைத் தாபிப்பதற்காக வழங்கப்பட்ட தொகையில் ரூபா 262,500 தொகை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ii) மாவட்ட அதிகாரக் குழுக்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 15,000 இல் ரூபா 7,500 தொகையும், பிரதேச அதிகாரக் குழுக்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 7,500 இல் ரூபா 5,000 தொகையும் வங்கிக் கணக்கை ஆரம்பிப்பதற்காக நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. அந்தப் பணம் கிடைத்து மாதமொன்றிற்குள் மன்றத்திற்கு எழுத்துமூலம் அறிவிக்க வேண்டியிருந்த போதிலும், அந்த அதிகாரக் குழுக்கள் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(iii) பணத்தை வழங்கும் போது முறையான பதிவேடொன்று பேணப்படாமையின் காரணமாக மீளாய்வாண்டில் ஒரு மாவட்டத்தில் எவ்வளவு எண்ணிக்கையிலான குழுக்களுக்கு நிதி வழங்கப்பட்டிருந்தது என குறிப்பாக இனங்காண முடியாதிருந்தது.

(ஆ) முதியோர் அடையாள அட்டைகளை வழங்குதல்

---

மீளாய்வாண்டின் போது 80,000 முதியோர் அடையாள அட்டைகளை விநியோகிப்பதற்காக ரூபா 600,000 நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) 2011 ஆம் ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை 581,020 முதியோர் அடையாள அட்டைகள் அச்சிடப்பட்டிருந்ததுடன் அதில் 99,159 அடையாள அட்டைகள் மாத்திரம் விநியோகிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ஒவ்வொரு ஆண்டிலும் எஞ்சுகின்ற அடையாள அட்டைகள் அடுத்த ஆண்டிற்காக விநியோகிக்கப்படாமல், புதிதாக அச்சிடப்பட்டமையின் காரணமாக மீளாய்வாண்டின் இறுதியில் 481,861 அடையாள அட்டைகள் பகிர்ந்தளிக்கப்படாமல் காணப்பட்டது.

(ii) பிரதேச செயலகப் பிரிவில் வாழ்ந்து வருகின்ற நபர்களை இனங்காணாமல் 246 பிரதேச செயலகங்களுக்காக முதியோர் அடையாள அட்டைகள் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டில் அடையாள அட்டைகள் எதுவும் விநியோகிக்கப்படாத 85 பிரதேச செயலகங்கள் காணப்பட்டன.

(இ) கண் மற்றும் செவிப்புலன் உபகரணங்களை வழங்குதல்

திட்டமிடப்பட்ட அளவினை விஞ்சி 3693 கண்களும், 489 செவிப்புலன் உபகரணங்களும் விழிப்புலனற்ற மற்றும் ஊனமுற்ற முதியோர்களுக்கு வழங்கப்பட்டதாகக் காண்பிக்கப்பட்டிருந்தும் அந்த உபகரணங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டமையை உறுதிப்படுத்துதல் தொடர்பான தகவல்கள் பேணப்பட்டிருக்கவில்லை.

(ஈ) பயிற்சி மற்றும் அறிவூட்டல் நிகழ்ச்சித் திட்டம்

(i) செயல்நடவடிக்கைத் திட்டத்தில் உள்ளடக்கப்படாத முதியோர்களுக்கான தேசிய கொள்கையினைத் தயாரிப்பதற்கான விஷேட செயற்திட்டத்திற்காக ரூபா 797,197 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், அந்த செலவினங்கள் பயிற்சி மற்றும் அறிவூட்டல் நிகழ்ச்சித்திட்டத்திலும் உள்ளடக்கப்பட்டிருந்தது.

(ii) கிராமிய மகளிர் அமைப்புக்கள் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கு முதியோர்களின் உரிமைகள் மற்றும் அவர்களுக்கு சமூகத்தில் உரித்தாகவுள்ள அந்தஸ்து தொடர்பாக 331 பிரதேச செயலகங்களுக்கு அறிவூட்டும் நிகழ்ச்சித் திட்டத்தை நடாத்துவதற்காக ரூபா 2,317,000 மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது 120 பிரதேச செயலகங்களில் இந்த நிகழ்ச்சித்திட்டத்தை நடாத்துவதற்காக ரூபா 1,687,000 தொகை செலவிடப்பட்டிருந்த போதிலும், 211 பிரதேச செயலகங்களில் இந்த நிகழ்ச்சித்திட்டத்தை நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையினால் மதிப்பீட்டுப் பெறுமதியில் ரூபா 1,370,000 தொகை பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(iii) இந்த நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் பாடசாலை மாணவர்களுக்கு பகிர்ந்தளிப்பதற்காக ரூபா 730,000 செலவிடப்பட்டு 10,000 குறிப்புப் புத்தகங்கள் (Pad book) அச்சிடப்பட்டிருந்ததுடன் அந்த புத்தகங்கள் பகிர்ந்தளிக்கப்பட்ட பாடசாலைகள் தொடர்பான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(உ) முதியோர் பராமரித்தல் சேவை

மீளாய்வாண்டின் போது உள்ளக தாதிச் சேவைக்கு இலங்கை முழுவதும் இருக்கின்ற நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரி தகைமையாளவர்களை

8

சேர்த்து பயிற்சியளித்து தொழிலுக்கு அனுப்பப்பட்டிருந்த போதிலும் அந்த நபர்களின் எண்ணிக்கை செயலாற்றல் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்க வில்லை. அவ்வாறே ஏனைய செயற்பாடுகளிலிருந்து முதியோர்களுக்கு கிடைக்கப்பெற்ற சேவைகள் மற்றும் பாதீட்டின் மூலம் விஷேட முன்மொழிவொன்றாகச் சமர்ப்பிக்கப்பட்ட முதியோர்களுக்கான தேசிய கொள்கையொன்றைத் தயாரித்தல் தொடர்பாக செயலாற்றல் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஊ) முதியோர்கள் தொடர்பான தரவுகளை நாளதுவரையாக்குதல்

முதியோர்கள் தொடர்பாக சரியானதும் நாளதுவரையாக்கப்பட்ட புள்ளிவிபரங்களைப் பேணிச் செல்லல் மன்றத்தின் ஒரு பணியாக இருந்ததுடன் அதற்காக சரியான தரவு முறைமையொன்றை பேணிச் செல்ல வேண்டுமென பொது முயற்சிகள் தொடர்பான செயற்குழுவின் சிபாரிசாக இருந்தது. அதன் பிரகாரம் மீளாய்வாண்டில் முதியோர் தினமான ஒக்தோபர் 01 ஆந் திகதி முதியோர் இல்லம், முதியோர் குழு, முதியோர் பகல் காப்பக நிலையம் மற்றும் முதியோர் எண்ணிக்கைகளை உள்ளடக்குவதற்கு திட்டமிடப்பட்டு அந்த தரவுகளை இணையதளத்தில் உள்ளடக்குவதற்கு முதியோர் உரிமை மேம்படுத்தல் உத்தியோகத்தருக்கும் அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் தரவு முறைமை நாளது வரையாக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) முதியோர் தினத்தை நடாத்துதல்

மீளாய்வாண்டின் ஒக்தோபர் 01 இல் உள்ளவாறு நடாத்தப்பட்ட சர்வதேச முதியோர் தினத்திற்காக ரூபா 11,000,000 நிதிஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 10,881,796 தொகை செலவிடப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) சர்வதேச முதியோர் தினத்தை கொண்டாடுவதற்காக 97 பிரதேச செயலகங்களில் 100 வயதை விஞ்சிய 150 முதியோர்களும், 24 பிரதேச செயலகங்களில் 75 வயதை விஞ்சிய அதிக பிள்ளைகளையுடைய 24 தாய்மக்களுக்காகவும் ரூபா 10,000 வீதம் பணம் கையளிக்கப்பட்டிருந்ததுடன் 38 பிரதேச செயலகங்களிலிருந்து அந்தப் பணக் கையளித்தல் கிடைத்தமைக்கு பற்றுச்சீட்டைப் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே

9

உரிய நபர்களுக்கு பணம் கிடைத்தமைக்கான உறுதிப்படுத்தல்களும் பெறப்பட்டிருக்கவில்லை.

(ii) முதியோர் தின விழாவைக் கொண்டாடுவதற்கு 84 பிரதேச செயலங்களுக்கு ரூபா 2,215,500 வழங்கப்பட்டிருந்ததுடன் அந்த நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டமைக்கு 34 பிரதேச செயலகங்களிலிருந்து அறிக்கை பெறப்பட்டிருக்கவில்லை.

(iii) இந்த விழாவிற்காக வருகை தந்த தமிழ் முதியோர்கள் 24 பேராக மாத்திரம் சமூகமளித்திருந்த போதிலும் ரூபா 82,000 செலவிடப்பட்டு 100 மொழிபெயர்ப்பு உபகரணங்கள் வாடகைக்கு பெறப்பட்டிருந்தன.

(iv) முதியோர் தினத்திற்கான கொடி வாரமொன்று ஆரம்பிக்கப்பட்டு முகப்பெறுமதி ரூபா 33,310,000 பெறுமதியான 2,500,000 கொடிகளும் 83,100 ஸ்டிக்கர்களும் மாவட்ட செயலகங்களும் பிரதேச செயலகங்களுக்கும் பகிர்ந்தளிக்கப்பட்டிருந்தன. மீளாய்வாண்டின் நவம்பர் 20 இல் உள்ளவாறு முதலாவதாக இந்தக் கொடி விற்பனையிலிருந்து கிடைக்கின்ற பணத்தில் 35 சதவீதம் அதாவது ரூபா 11,658,500 தொகை முதியோர் செயலகத்திற்கு வழங்கப்பட வேண்டுமென எழுத்துமூலம் காண்பிக்கப்பட்டிருந்தது. எனினும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அந்தப் பணத்தைப் பெற்றுக்கொள்வதற்கு அல்லது விற்பனை செய்யப்படாத கொடி மற்றும் ஸ்டிக்கர்களை மீளப்பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(v) முதியோர் தினத்திற்கு இணையாக மீளாய்வாண்டின் செப்தெம்பர் மற்றும் ஒக்தோபர் மாதங்களின் போது ஊடகங்களின் மூலம் அறிக்கை ரீதியான நிகழ்ச்சித்திட்டங்களை ஒலிபரப்புதல், வயதான தன்மை தொடர்பான காலரீதியான விவாதங்களை நடாத்துதல், முதியோர்களின் பெறுமதியைக் காண்பிக்கின்ற வியாபார அறிவித்தல்களை ஒலிபரப்புதல், அச்சிடப்பட்ட ஊடங்களில் சட்ட ரீதியாக பிரசுரிக்கப்படும் கடித வரிகளைத் தயாரித்தல் மற்றும் இலத்திரனியல் ஊடக காலஎல்லையில் கொள்வனவு செய்து அவற்றில் முதியோர் விடயப் பரப்பு தொடர்பாக அதிகமாக கலந்துரையாடல்களில் ஒன்று சேர்த்து ஊடக நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துவதற்கு கட்டுப்பாட்டுச் சபையின் அங்கீகாரம் பெறப்பட்டிருந்த போதிலும், அந்த நிகழ்ச்சித்திட்டங்கள் எதுவும் நடாத்தப்பட்டிருக்கவில்லை.

**4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முதியோர்களுக்கான தேசிய கொள்கையொன்றை தயாரித்தல்

தேசிய பாதீட்டுத் திணைக்களத்தால் 75 வயது வரையான சிஷ்ேட பிரஜைகளுக்கான காப்புறுதித் திட்டமொன்றை ஏற்படுத்துதல் மற்றும் 65 வயதுக்கு மேற்பட்ட முதியோர்களுக்காக பொது போக்குவரத்து வசதிகளை வழங்குதல் போன்ற இரண்டு முன்மொழிவுகளை உள்ளடக்கி முதியோர்களுக்கான தேசிய கொள்கையொன்று தயாரிக்க வேண்டியதாக முன்மொழியப்பட்டு அதற்காக ரூபா 10,000,00 நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது.

இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) இந்தக் கொள்கையைத் தயாரிப்பதற்காக 25 மாவட்டங்களுக்கு ரூபா 2,438,715 தொகை மீளாய்வாண்டின் போது வழங்கப்பட்டிருந்ததுடன் பணி நிறைவுற்றதன் பின்னர் ஒக்தோபர் 10 ஆந் திகதிக்கு முன்னர் கருத்துக்கள் மற்றும் முன்மொழிவுகள் முதியோர் செயலகத்திற்கு வழங்க வேண்டியிருந்தது. எனினும் மீளாய்வாண்டின் திசெம்பர் மாதத்தின் போது 16 மாவட்டங்களின் செலவின விடயங்களும், 8 மாவட்டங்களின் கொள்கை தயாரித்தல் அறிக்கைகளையும் மன்றத்தால் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) மீளாய்வாண்டின் போது கொள்கையைத் தயாரிப்பதற்காக மன்றத்தால் ரூபா 797,197 செலவிடப்பட்டிருந்ததுடன் எஞ்சிய பணிகளுக்காக ரூபா 2,253,065 தொகை அமைச்சிலிருந்து பெறப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்தப் பணத்திலிருந்து ரூபா 1,694,164 தொகை உரிய பணிகளுக்குப் பயன்படுத்தப்படாமல் வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

### 4.3 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

2009 ஆம் ஆண்டின் போது மன்றத்திற்கு நன்கொடை உரித்துறுதியின் மூலம் கிடைக்கப் பெற்ற 02 ஏக்கரிலான நிவித்திகல, நில்வலா செவன அங்கவீன நிலையம் என்பவற்றின் காணி மற்றும் கட்டிடங்கள் அவ்வாண்டின் போதே ரூபா 390,000 செலவில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டு வரையிலும் எந்தவொரு பணிக்காகவும் பயன்படுத்தப்படாமல் மூடி வைக்கப்பட்டிருந்தது. பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமையின் காரணமாக இந்தக் காணியை கையளித்தவரினால் மீண்டும் காணியைக் கோரி வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

### 4.4 பதவியணியினர் நிர்வாகம்

மன்றத்தின் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை 141 ஆக இருந்ததுடன் உள்ளபடியான ஊழியர் எண்ணிக்கை 121 ஆக இருந்தமையால் பதவியணியினரில் 20 வெற்றிடங்கள் காணப்பட்டன. 2011 ஆம் ஆண்டிலிருந்து வெற்றிடமாகக் காணப்பட்ட உதவிப் பணிப்பாளர் (நிர்வாகம்) பதவி மற்றும் சட்ட உத்தியோகத்தர் பதவி என்பன 2017 யூன் 12 ஆந் திகதி வரையிலும் வெற்றிடமாகக் காணப்பட்டது.

### 4.5 செயற்பாட்டு நடவடிக்கைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 70 வயதுக்கு மேற்பட்ட முதியோர்களுக்காக வழங்கப்படுகின்ற ரூபா 2,000 தொகையில் மீண்டும் ரூபா 100 பிரதேச செயலகங்களின் மூலம் மன்றத்திற்கு வழங்கப்பட்டிருந்ததுடன் அந்தப் பணத்திலிருந்து செய்யப்பட வேண்டிய 10 செயற்பாடுகளுக்காக மீளாய்வாண்டின் ஆகஸ்ட் 30 ஆந் திகதிய அமப/16/0719/711/010 என்ற அமைச்சரவைக் குறிப்பின் மூலம் அங்கீகாரமும் பெறப்பட்டிருந்தது. எனினும், மீளாய்வாண்டின் பெப்ரவரி மாதம் முதல் திசெம்பர் மாதம் வரை கிடைக்கப்பெற்ற ரூபா 427,704,100 தொகை நடைமுறைக் கணக்கில் வைப்புச் செய்யப்பட்டிருந்ததுடன் உரிய பணிகளை நிறைவேற்றாமல், அதில் ரூபா 389,000,000 தொகை திசெம்பர் மாதத்தின் போது நிலையான வைப்புக் கணக்கிற்கு மாற்றப்பட்டிருந்தது.

(ஆ) முதியோர் நலன்களுக்காக அரசாங்க வங்கியொன்றில் காணப்பட்ட ரூபா 6,974,959 பெறுமதியான நிலையான வைப்பிற்குரிய வட்டிப் பணத்திலிருந்து

ரூபா 10,000 வீதம் 30 சிறுநீரக நோயாளர்களுக்கு வழங்குவதற்கு நிர்வாக சபையின் அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது. எனினும் வட்டியாகக் கிடைத்த ரூபா 441,267 தொகையான பணம் வருமானத்திற்கு செலவு வைக்கப்பட்டு 25 மாவட்டங்களுக்காக ரூபா 250,000 மாத்திரம் வழங்கப்பட்டிருந்தது.

(இ) 2012 யூன் 02 ஆந் திகதி நடைபெற்ற பொது முயற்சிகள் தொடர்பான செயற்குழுவின் மூலம் மன்றத்திற்குரிய ரூபா 4,000,000 தொகையான நிலையான வைப்பினை நலன்புரி நிதியமாக மாற்றுவதற்கான கட்டளை வழங்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அந்த வைப்பு மீதி ரூபா 6,974,959 ஆக இருந்ததுடன் அது நலன்புரி நிதியமாக மாற்றப்படாமல் நிலையான வைப்பொன்றாகப் பேணப்பட்டிருந்தது.

### 4.6 முறையாக கையேற்கப்படாத காணி மற்றும் கட்டிடங்களில் செயற்திட்டங்களை ஆரம்பித்தல்

2003 ஆகஸ்ட் 22 ஆந் திகதி சமூக சேவைகள் பணிப்பாளரால் கதிர்காமத்தில் அமைந்துள்ள முதியோர் இல்லம் மற்றும் வழிகாட்டல் நிலையம் ஆகியவற்றுக்கு சொந்தமான அனைத்து அசையும் மற்றும் அசையா சொத்துக்கள் மன்றத்திற்கு கையளிக்கப்பட்டு 12 வருட காலம் கடந்திருந்தது. எனினும் அந்த காணி மற்றும் கட்டிடத்தை முறையான பிரகாரம் அளந்து உரித்துறுதியொன்றினை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்காதிருந்ததுடன் 2004 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு வரை பழுதுபார்த்தல்கள் மற்றும் நிர்மாணங்களுக்காக ரூபா 11,974,436 மன்றத்தின் நிதியத்திலிருந்து செலவிடப்பட்டிருந்தது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 செயல்நடவடிக்கைத் திட்டம்

செயல்நடவடிக்கைத் திட்டத்தை நிறைவேற்றும் செயல்முன்னேற்றத்தை காலரீதியாக பரீட்சிப்பதற்கான திட்டமொன்று மன்றத்தால் அறிமுகப்படுத்தப்படாதிருந்ததுடன் சில வருடங்களாக திட்டத்தில் காண்பிக்கப்பட்ட செயற்பாடுகள் அதிகாரச்சட்டத்தின் நோக்கங்களுக்கு பொருத்தமான முறையில் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

பாதீடு செய்யப்பட்ட வருமானத்திற்கும் செலவினத்திற்கும் மற்றும் உள்ளபடியான வருமானத்திற்கும் செலவினத்திற்கும் இடையே 10 சதவீதம் முதல் 62 சதவீதம் வரையிலான வீச்சில் முரண்கள் அவதானிக்கப்பட்டமையினால் பாதீடு

முகாமைத்துவக் கட்டுப்பாட்டுக் கருவியொன்றாகப் பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

(அ) முதியோரின் சேமநலன் மற்றும் உரிமைகளை மேம்படுத்துதல் தொடர்பில் அரசுக்கு ஆலோசனை வழங்குதல், இலங்கையின் பாரம்பரிய மரபுகளின் அடிப்படையில் அமைந்த குடும்ப அலகினை வலுவூட்டுவதற்காக அரசு மற்றும் ஏனைய தகுதிவாய்ந்த நிறுவனங்களுக்கு நிகழ்ச்சித்திட்டங்களை பரிந்துரை செய்தல்.

(ஆ) முதியோர் தொடர்பில் சரியானதும் நாளதுவரையாக்கப்பட்டதுமான புள்ளிவிபரவியல் பதிவேடுகளைப் பேணுதல்.

(ஊ) வயது முதிர்ந்தோருக்காக சுகாதாரக் காப்பீட்டு நலன் உத்தேசத் திட்டமொன்றை அறிமுகப்படுத்துதல் மற்றும் அமுல்படுத்துதல்.

**6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு குறைபாடுகள் அவ்வப்போது மன்றத்தின் தலைவரின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. கீழே குறிப்பிடப்பட்ட கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | | அவதானிப்புக்கள் |
|---|---|---|---|
| (அ) | கணக்கீடு | (i) | உரிய பிரகாரம் சொத்துக்கள் மற்றும் நன்கொடைகள் கணக்கு வைக்கப்பட்டிருக்காமை |
| | | (ii) | முற்பணம் வழங்கும் போது அதனை முற்பணமாக கணக்கீடு செய்வதற்குப் பதிலாக செலவினமாகக் கணக்கீடு செய்யப்பட்டமையின் காரணமாக செலவிடப்படாமல் மீளக்கிடைத்த பணம் கணக்கீடு செய்யப்படாமைக்கான ஆபத்தொன்று காணப்படுகின்றமை |
| (ஆ) | பதவியணியினர் | | பதவியணியினர் வெற்றிடங்களை நிரப்பாமை |

14

| | | |
|---|---|---|
| | | மற்றும் பதவியணியினரின் வெற்றிடங்கள் காரணமாக செயல் முன்னேற்றத்திற்கு தாக்கத்தை ஏற்படுத்தியமை. |
| (இ) | நிதிக்கட்டுப்பாடு | நிதியம் குறைவான பயன்பாட்டுடன் காணப்பட்டமை |
| (ஈ) | செயற்பாட்டுக் கட்டுப்பாடு | முதியோர்களின் கருத்துக்களை சமூகத்திற்கு வழங்குதல், நலன்புரி நடவடிக்கைகளைச் செய்தல் போன்ற பணிப்பொறுப்புக்களைச் செய்ய வேண்டியிருந்த போதிலும், குழுவிற்காக நிதியை வழங்கியதன் பின்னர், அவ்வாறான பின்புலமொன்றை வடிவமைத்தமையை உறுதிப்படுத்துவதற்கு பின்தொடர் நடவடிக்கை எடுக்காமை. |

டபிள்யூ.பீ.சீ. விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி (பதில்)

**ஒப்பம்./எச்.எம். காமினி விஜேசிங்ஹ**
**கணக்காய்வாளர் தலைமை அதிபதி**

15

සමාජ සවිබලගැන්වීම්, සුබසාධන හා කන්ද උඩරට උරුමය පිළිබඳ අමාත්‍යාංශය
சமூக வலுவூட்டல், நலன்புரி மற்றும் கண்டி மரபுரிமைகள் அமைச்சு
MINISTRY OF SOCIAL EMPOWERMENT, WELFARE& KANDYAN HERITAGE

ජාතික වැඩිහිටි මහලේකම් කාර්යාලය
முதியோர்களுக்கான தேசிய செயலகம்
National Secretariat for Elders

| | | |
|---|---|---|
| මගේ අංකය / எனதுஇல / My No: NSE/DEV/15/1 | ඔබේ අංකය / உமது இல / Your No. | දිනය / திகத / Date: 2017.11.04 |

செயலாளர்,
சமூக வலுவூட்டல், நலன்புரி மற்றும் கண்டி மரபுரிமைகள் அமைச்சு,

கணக்காய்வாளர் அதிபதி,
கணக்காய்வாளர் அதிபதி திணைக்களம்.

**முதியோர்களுக்கான தேசிய சபையின் 2016 ஆம் ஆண்டு திசம்பர் 31 ஆந் திகதியுடன் முடிவுற்ற வருடத்திற்கான நிதிசார்கூற்று தொடர்பில் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 14(2) (சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வு அறிக்கை**

2. **நிதிசார் கூற்று**

2.1. **நிதிசார் கூற்றுத் தொடர்பிலான கருத்துக்களை வெளியிடுதல்**

2.2.1. **கணக்கீட்டுக் குறைபாடுகள்**

(அ) பணிக்கொடை ஒதுக்கீடுகளை ஒதுக்கும் கணக்குக்கான மீதியினை 2017 ஆம் ஆண்டில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன்.

(ஆ) கதிர்காமம் நிர்மாணப் பணிகள் தொடர்பிலான செலவுகளுக்கான கட்டிடக் கணக்கு மற்றும் கட்டிடத் தேய்மானத்தினை வேறாக்கும் கணக்குக்கான மீதிகளை கணக்காய்வில் உடன்பட்டவாறு 2017 ஆம் ஆண்டில் திருத்தஞ் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன்.

(இ) இற்றை வரையில் கதிர்காமம் சுற்றுலா விடுதி, கதிர்காமம் முதியோர் இல்லம் மற்றும் எச்ஜின் நோனா முதியோர் இல்லம் அமைந்துள்ள இடம் மற்றும் கட்டிடத்தினை மதிப்பீடு செய்து அதன் சந்தைப் பெறுமதி கிடைக்கப் பெற்றுள்ளது என்பதைத் தயவுடன் அறியத் தருகின்றேன். 2017 இறுதிக் கணக்கினூடாக இப்பெறுமதியினை கணக்கிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதாகவும்,

ලිපිනය : 2 වන මහල, D කොටස, සෙත්සිරිපාය - දෙවන අදියර, බත්තරමුල්ල.
முகவரி : 2ஆம் மாடி,தொகுதி D,செத்சிறிபாய-கட்டம் II,பத்திரமுல்லை
Address : 2nd Floor,Block D, Sethsiripaya- II Stage, Baththaramulla.
ඊ-මේල්/ ஈ-மெயில்/ E-mail : nsemss@gmail.com
දුරකථන / தொலைபேசி/ Telephone:
අධ්‍යක්ෂ / பணிப்பாளர் / Director : 2187045
කාර්යාලය / அலுவலகம் / Office : 3094543/4
ෆැක්ස්/ பெக்ஸ் / Fax : 0112187015

நிவிதிகல நில்வலா செவண அங்கவீனர் நிலையத்திற்கு உரித்தான காணியினை நிவிதிகல பாரவத்த சந்தியில் வசிக்கும் கங்காணம்லாகே குணதிலக அவர்களினால் நன்கொடை உறுதியொன்றின் மூலம், கோமாகம வடக்கு பிட்டிபன, இலக்கம் 146, என்ற காணி பிரதான அலுவலகம் அமைந்துள்ள நில்வலா செவண அங்கவீனர் நிலையத்தின் தவிசாளர் மஞ்சு ஶ்ரீ திசானாயக்க மற்றும் அதன் செயலாளர் திலக் பிரியந்த அபேநாயக்க ஆகியோருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதுடன், இக்காணி அவர்களினால் சமூக சேவைகள் திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட காணி சமூக சேவைகள் திணைக்களத்தினால் முதியோர்களுக்கான தேசிய செயலகத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரிய நன்கொடை உறுதியினை வழங்கும்போது நிலத்திற்கு உரித்தான கங்காணம்லாகே குணதிலக அவர்களினால் முன்வைக்கப்பட்ட நிபந்தனைகளுள் 02 வது நிபந்தனைக்கமைய அவ்விடத்தினை வேறொருவருக்கு ஒப்படைக்க முடியாது என்பதால், உரிய காணியின் உறுதியினை மீளவும் சமூக சேவைகள் திணைக்களத்திற்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் இற்றை வரையில் உரிய காணியின் மேற்குறிப்பிட்ட நிபந்தனையினை மீறியமையினைக் காரணமாகக் காட்டி தமக்கு ஒப்படைக்குமாறு வஸ்து கங்காணம்லாகே குணதிலக அவர்களின் பிள்ளைகளினால் இரத்தினபுரி மாவட்ட நீதிமன்றத்தில் வழக்கொன்று தொடுக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் அவ்வழக்கின் வழக்குத் தீர்ப்பின் பிரகாரம் எதிர்வரும் காலங்களில் நடவடிக்கை எடுப்பதாகக் குறிப்பிடுகின்றேன்.

(ஈ) கணக்காய்வில் உடன்பட்டவாறு 2017 ஆம் ஆண்டில் திருத்தஞ் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன்.

(உ) திறைசேரி வழங்கல் கணக்கின் மீதியினை 2017 ஆம் ஆண்டில் சரி செய்வதற்கு நடவடிக்ககை எடுக்கின்றேன்.

2.2.2. **<u>கணக்காய்வு தொடர்பில் சாட்சிகள் இல்லாமை</u>**

- இற்றை வரையில் இறுதிப் பணி அறிக்கைகள் மற்றும் இறுதிப் பற்றுச்சீட்டுக்கள், 04 பிரதேச செயலகங்களிலிருந்து கிடைக்கப் பெற்றுள்ளதுடன், இற்றை வரையில் அறிக்கைகளை வழங்காத பிரதேச செயலகங்கள் அவற்றினை வழங்குவதற்கு விழிப்புணர்வூட்டுதல் இடம்பெற்றுள்ளதுடன், அவ்வறிக்கைகளைப் பெற்று தங்களுக்கு முன்வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன் என்பதைத் தயவுடன் அறியத் தருகின்றேன்.

2.2.3. **<u>சட்டங்கள், விதிகள், ஒழுங்குகள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை</u>**.

(அ) மொத்தச் செலவு மதிப்பீட்டினைத் தயாரிப்பதற்கான உரிய நடவடிக்கைகள் இற்றை வரையில் இடம்பெற்று வருகின்றது.

(ஆ) 2016.12.31 ஆந் திகதியளவில் சகல முற்பண மீளச்செலுத்துகை இடம்பெற்றுள்ளது என்பதைத் தயவுடன் அறியத் தருகின்றேன்.

(இ) சகல உத்தியோகத்தர்களும் விழிப்புணர்வூட்டப்பட்டுள்ளதுடன், ஒரு உத்தியோத்தர் தவிர ஏனைய சகல உத்தியோகத்தர்களும் இற்றை வரையில் மருத்துவ அறிக்கைகளை வழங்கியுள்ளதுடன் வழங்காத உத்தியோகத்தரின் மருத்துவ அறிக்கையினை மிக விரைவில் வழங்குமாறு நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஈ) இந்நிறுவனத்தின் கணனிகளைக் கொள்வனவு செய்தபோது பொறித் தொகுதி செலவு விடயத்தின் கீழேயே இற்றை வரை காலமும் கணக்கு வைக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2016 ஆம் ஆண்டுக்கென ஒதுக்கீடுகளை ஒதுக்குதல், கொள்வனவு செய்தல் அச்செலவு விடயத்தின் கீழ் இடம்பெற்றுள்ளதுடன், 2017 ஆம் ஆண்டில் கணனிகளுக்கான உரிய தகவல்களை கணனி செலவு விடயத்தின் கீழ் கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக அறியத் தருகின்றேன்.

## 03. <u>நிதிசார் மீளாய்வு</u>

### 3.1. <u>நிதிசார் விளைவு</u>

## 4. <u>செயற்பாட்டு மீளாய்வு</u>

### 4.1. <u>செயற்பாடு</u>

(அ) முதியோர்களுக்கான தேசிய செயலகத்தினால் இற்றை வரையில் தயாரிக்கப்பட்டு வரும் முதியோர் தொடர்பிலான தேசியக் கொள்கையினூடாக இலங்கையின் பாரம்பரிய ஒழுக்க விழுமியங்களின் கீழான குடும்ப அலகினை வலுவூட்டுவதற்கு தேவையான ஆலோசனைகள் அரசுக்கு வழங்குவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதே போல முதியோர்களுக்கான தேசிய செயலத்தினூடாக தயாரிக்கப்பட்டு வரும் இணையத் தளத்தினூடாக ஏனைய அமைப்புக்கள் மற்றும் நபர்களுக்கு தேவையான ஆலோசனைகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதைத் தயவுடன் அறியத் தருகின்றேன்.

(ஆ) இந்நாட்டில் வாழும் சகல முதியோர்கள் தொடர்பிலான தகவல்கள் திட்டமொன்று உள்ளடக்கப்பட்ட இணையத்தளமொன்று, முதியோர்களுக்கான தேசிய செயலகத்தினூடாக அமைக்கப்பட்டு வருகின்றது.

(இ) முதியோர்களின் பிரச்சினைகளிற் செல்வாக்குச் செலுத்தும் சமூகப் பொருளாதாரம் மற்றும் கலாசாரப் பிரச்சினைகள் தொடர்பில் தேசிய சபையில் விசேட அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

அதன் பிரகாரம் தற்போது 70 வயதினைத் தாண்டிய மூத்த பிரஜைகளுக்கென வழங்கப்பட்டு வரும் மாதாந்தம் ரூபா. 2000/- கொடுப்பனவு தொடர்பில் முறைசார் ஆய்வொன்று இடம்பெற்று நிறைவு செய்யப்பட்டுள்ளது.

உரிய வருடத்திலேயே மேலும் ஒரு நடவடிக்கையினை எதிர்வரும் காலத்தில் எடுக்கும் முகமாக கொழும்புப் பல்கலைக்கழகம் மற்றும் தொடர்புபடும் மேல் மாகாணத்தில் அமைந்துள்ள முதியோர் இல்லங்களில் வசிக்கும் முதியோர்களின் ஆரோக்கிய நிலைமை தொடர்பில் விசேட ஆய்வினை முன்னெடுப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பிலான விசேட விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டமொன்று 2017.07.07 ஆந் திகதி கொழும்புப் பல்கலைக்கழகத்தில் நடாத்தப்பட்டது.

(ஈ) முதியோர்கள் முகங்கொடுப்பதற்கு நேரிடும் சகல சமூக, பொருளாதார மற்றும் கலாசாரம் சார் பிரச்சினைகள் தொடர்பில் விழிப்புணர்வூட்டும் முகமக 118 அதி விசேட தொலைபேசி இலக்கம் அறிமுகஞ் செய்யப்பட்டுள்ளது.

அதே போல ஜீன் 15 ஆந் திகதி நினைவுகூரப்பட்ட முதியோர் சித்திரவதையினைத் தடுக்கும் தினத்திற்கென நாடுபூராவும் ஸ்ரிக்கல் வேலைத்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன், அதன் ஆரம்ப நிகழ்ச்சியினை விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் அவர்களின் தலைமையில் 2017.06.15 ஆந் திகதி கொழும்பு மத்திய பேரூந்துத் தரிப்பிடம் மற்றும் கோட்டை புகையிரத நிலையத்தினை மையமாகக் கொண்டு நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதனூடாக இந்நாட்டில் வாழும் சகல முதியோர்களுக்கும் அவர்களுக்கு இடம்பெறும் சமூக, பொருளாதார மற்றும் கலாசாரம்சார் பிரச்சினைகள் தொடர்பில் முதியோர்களுக்கான தேசிய செயலகத்தினை விழிப்புணர்வூட்டும் செயற்பாடுகள் தொடர்பிலும் மற்றும் முதியோர்களுக்கான தேசிய சபையினூடாக இந்நாட்டில் இடம்பெறும் சேவைகள் தொடர்பிலும் விழிப்புணர்வூட்டுதல் இடம்பெற்றுள்ளது.

(உ) முதியோர்களின் நிலைமையினை மேம்படுத்துவதற்கு அரச மற்றும் ஏனைய நிறுவனங்களினால் அமுறப்படுத்தப்படும் முன்மொழிவுகள் அல்லது ஏனைய செயற்பாடுகள் அனைத்தும் இச்சபையின் கீழ் அமைக்கப்பட்டுள்ள முதியோர்களுக்கான தேசிய செயலகத்தினால் கண்காணிப்பு மற்றும் ஒருங்கிணைப்பு செய்யப்படுகின்றது என்பதைத் தயவுடன் சுட்டிக் காட்ட விரும்புகின்றேன்.

உரிய நிறுவனத்தினூடாக தற்போதைய அரசினால் முதியோர் நலன்புரிக்கென அமுறப்படுத்தப்படும் சகல செயற்பாடுகள் நாடுபூராவும் அமுறப்படுத்தப்படுவதுடன் அவற்றின்

கண்காணிப்புச் செயற்பாடுகளும் இடம்பெற்று வருகின்றது.

அதே போல அந்நிறுவனம், நாடுபூராவும் அமைந்துள்ள பிரதேச செயலகங்கள், மாவட்டச் செயலகங்கள், மாகாண சமூக சேவைகள் திணைக்களம் மற்றும் முதியோர்களுக்கென சேவைகளினை வழங்கி வரும் ஏனைய தன்னார்வத் தொண்டு அமைப்புக்கள், உள்ளூர் அரச சார்பற்ற அமைப்புக்கள், சர்வதேச அரச சார்பற்ற அமைப்புக்கள் மற்றும் நபர்களினை ஒருங்கிணைத்து முன்னெடுக்கப்படுவதாக தயவுடன் எடுத்தியம்புகின்றேன்.

(ஊ) முதியோர்கள் தொடர்பில் சுகாதாரக் காப்புறுதிப் பயன் முன்மொழிவுத் திட்டத்தினை அமுறப்படுத்துதல் தொடர்பில் இலங்கையில் அமைக்கப்பட்ட சகல வணிகக் காப்புறுதி நிறுவனங்களின் பிரதிநிதிகளின் கலந்துகொள்ளலுடன் 2016.05.09 நடாத்தப்பட்டது.

உரிய கலந்துரையாடலில் வணிக நோக்கங்களை அமுறப்படுத்தும் பிரத்தியேகப் பிரிவின் காப்புறுதி நிறுவனங்கள், இது தொடர்பில் காட்டும் உளப்பாங்குக் காரணங்களின் அடிப்படையில் அவர்களின் முன்வைப்பு மிகவும் குறைந்த மட்டத்திலுள்ளது.

அதன் பிரகாரம், சமூகப் பாதுகாப்பு நிதியத்துடன் தொடர்புபட்டு புதிய காப்புறுதித் திட்டமொன்றினை அமுறப்படுத்துவதற்கு இற்றை வரையில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதைத் தயவுடன் சுட்டிக் காட்ட விரும்புகின்றேன்.

(எ) உரிய விடயங்கள் தொடர்பில் விசேட கவனஞ் செலுத்தப்பட்டுள்ளது என்பதைத் தயவுடன் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

முதியோர்களுக்கான தேசிய செயலகத்தினூடாக அமுறப்படுத்துவதற்கு முன்மொழியப்பட்ட அத்தம்மா கேற்றறிங் கருத்திட்டம், உள்ளூர்ப் பயிர்ச்செய்கை வளர்ப்புக் கருத்திட்டம் மற்றும் சுழற்சிக் கடன் நிதியத்தினூடாக முதியோர்களுக்கான வருமானத்தினை உழைக்கும் வாய்ப்புக்களை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதே போல இந்நிறுவனத்தின் இணையப் பக்கத்தினூடாக காட்டுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள முதியோர்களுக்கென ஒதுக்கப்பட்டுள்ள சேவை நிலையங்கள் மற்றும் தொழில் வாய்ப்புக்களினூடாக அவர்களுக்குத் தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்கும் வேலைத்திட்டத்தினை வெற்றியாக்குவதற்கு முயற்சி எடுத்து வருவதைத் தயவுடன் அறியத் தருகின்றேன்.

மேலும் நாடுபூராவும் பரந்து காணப்படும் முதியோர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர்கள் மற்றும் முதியோர் விடயத்திற்குப் பொறுப்பான உத்தியோகத்தர்களினூடாக நாடுபூராவம் பரந்துள்ள இயலுமைகளினைக் கொண்ட முதியோர்கள் தொடர்பிலான பெயர் ஏட்டினை வெளியிடுவதற்கு இனிவருங் காலங்களில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதைத் தயவுடன் குறிப்பிடுகின்றேன்.

(அ) **முதியோர் அமைப்புக்களுக்க நிதியுதவிகளை வழங்குதல்.**

I. கிராமிய முதியோர் அமைப்புக்கள், பிரதேச முதியோர் அமைப்புக்கள், மாவட்ட முதியோர் அமைப்புக்கள் மற்றும் மாகாண முதியோர் அமைப்புக்கள் மற்றும் முதியோர் அமைப்புக்களுக்கான நிதிசார் உதவிகள் வழங்குதல் இடம்பெற்று வருவது உரிய முதியோர் அமைப்புக்களின் வேண்டுகோளின் கீழாகும்.

மேற்குறிப்பிட்ட செலவுத் தலைப்பின் கீழ் இரண்டு மில்லியன் நிதி ஒதுக்கப்பட்டிருப்பது, உரிய முதியோர் அமைப்புக்களுக்கு நிதியுதவிகளை வழங்குதல் மற்றும் முதியோர் அமைப்புக்களுக்கான ஏனைய விசேடமான பணிகளுக்காகும்.

அதன் பிரகாரம், கிடைக்கப் பெற்ற வேண்டுகோள்களின் பிரகாரம், 325 கிராமிய முதியோர் அமைப்புக்கள், 03 பிரதேச முதியோர் அமைப்புக்கள், 01 மாவட்ட முதியோர் அமைப்பு மற்றும் 02 மாகாண முதியோர் அமைப்புக்களுக்கென நிதியுதவிகள் வழங்கப்பட்டுள்ளதுடன், மீதி நிதி, முதியோர் அமைப்புக்களின் ஏனைய விசேடமாக பணிகளுக்கென ஒதுக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளது என்பதைத் தயவுடன் குறிப்பிட விரும்புகின்றேன்.

II. 2016 ஆம் ஆண்டில் நிதியுதவிகள் வழங்கப்பட்டுள்ள மாவட்ட முதியோர் அமைப்புக்கள் மற்றும் பிரதேச முதியோர் அமைப்புக்களுக்கு நிதி கிடைக்கப் பெற்றமை தொடர்பில் பற்றுச்சீட்டு கிடைக்கப் பெற்றுள்ளதுடன் அதற்கான நிதி மீதிகளை உறுதிப்படுத்திக் கொள்ளுவதற்கு உரிய நடவடிக்கைகள் இற்றை வரையில் இடம்பெற்று வருவதாகவும் எதிர்வருங் காலங்களில் அது தொடர்பில் தங்களுக்கு அறிக்கையிடுவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன்.

III. 2016 ஆம் ஆண்டில் அமைப்புக்களுக்கு வழங்கப்பட்டுள்ள நிதியுதவிகள் தொடர்பில் பிரதேச செயலக மட்டங்களில் ஆவணங்கள் தயாரிக்கப்பட்டுள்ளதுடன் இனிவரும் வருடங்களில் அவ் ஆவணத்தினை மாவட்ட மட்டத்தில் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன்.

IV. பிரதேச செயலாளரின் பரிந்துரையுடன் செய்யப்பட்ட வேண்டுகோளுக்கமைய 2016 ஆம் ஆண்டில் முதியோர் அமைப்புக்களுக்கு வழங்கப்பட்ட நிதியுதவிகள் தொடர்பிலான மீதிகள் உறுதிப்படுத்தப்பட்டு வருவதுடன் சகல தகவல்களையும் விரைவில் பெற்று தங்களுக்கு முன்வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன்.

V. முதியோர் அமைப்புக்களின் அங்கத்தவர்கள் அவர்களின் பணிகள் தொடர்பில் கலந்துரையாடுவதற்கு கூட்டம் நடாத்தப்பட்டு வருவதுடன், அவர்களின் அநேக கூட்டங்கள் அவர்களின் நலன்புரி தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் இது தொடர்பில் உரிய பிரதேசங்களின் முதியோர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர்களையும் கலந்துகொள்ளச் செய்வதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. மேலும் இது தொடர்பில் இனிவருங் காலங்களில் செயற்பாட்டு அறிக்கையினுள் உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருதாக அறியத் தருகின்றேன்.

(ஆ) <u>முதியோர் அடையாள அட்டைகளை வழங்குதல்</u>

I. அடையாள அட்டைகள் வழங்குதல், பிரதேச செயலங்களினூடாக இடம்பெற்று வருவதாகவும், இவ் அட்டைகள் கொள்வனவு செய்யப்பட்டதன் பின்னர் நிறுவனத்தில் அச்சிடப்பட்டு அச்சடிக்கப்பட்ட அட்டைகள் மற்றும் லெமினேட் கவர் பிரதேச செயலகங்களுக்கு வழங்கப்படுகின்றது. உரிய பிரதேச செயலகங்களினூடாக இப்பணிக்கென பயன்படுத்தப்படாத மீதி அட்டைகள் பிரதேச செயலகங்களில் சேர்த்து வைக்கப்பட்டுள்ளதுடன் அவ் அலுவலகங்களினூடாக மீதி அட்டைகள் அடுத்து வரும் வருடத்தில் பாவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தயவுடன் குறிப்பிட விரும்புகின்றேன்.

II. அடையாள அட்டைகளை வழங்குதல் தொடர்பில் ரூபா. 600,000.00 நிதி மீளாய்வு ஆண்டில் வழங்கப்பட்டுள்ளது. அவ்வருடத்தில் நடாத்தப்பட்ட ஜனாதிபதி நடமாடும் சேவைகளுக்கு ஒத்து அடையாள அட்டைகளை வழங்கும்போது அவ்அடையாள அட்டைகள் தொடர்பிலான தேவையான புகைப்படங்களை அச்சடிப்பதற்கு செலவான மேலதிக நிதியினை உரிய பிரதேச செயலங்களுக்கு வழங்குவதற்கு நேரிட்டதன் காரணத்தினால் அந்நிதி பல்வேறான வருமானங்களினூடாகப் பெற்றுக் கொள்ளுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகத் தயவுடன் அறியத் தருகின்றேன்.

III. 2016.12.31 ஆந் திகதியளவில் சகல பிரதேச செயலகங்கள் முதியோர் அடையாள அட்டைகளை வழங்கும் செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளதை அறியத் தருகின்றேன்.

(இ) **<u>கண் வில்லைகள் மற்றும் செவிப்புலக் கருவிகளை வழங்குதல்.</u>**

- 2015 ஆம் ஆண்டில் கண்வில்லைகள் மற்றும் செவிப்புலக் கருவிகளைக் கொள்வனவு செய்த விலைமனுக்களின் பிரகாரமே, 2016 ஆம் ஆண்டு தொடர்பில் கண் வில்லைகள் மற்றும் செவிப்புலக் கருவிகளை வழங்குவதற்கு திட்டமிடப்பட்டது, 2016 ஆம் ஆண்டில் 2015 ஆம் ஆண்டினை விட குறைந்த விலையில் கண்வில்லைகளைக் கொள்வனவு செய்வதற்கு முடியும். அதன் பிரகாரம் திட்டமிடப்பட்ட அளவுக்கு அதிகமான செவிப்புலக் கருவிகள் மற்றும் கண்வில்லைகளைப் போதிய பயனாளிகளுக்கு வழங்குவதற்கு முடியும்.

  செவிப்புலக் கருவிகள் மற்றும் கண்வில்லைகள் பெறப்பட்டுள்ளதை உறுதிப்படுத்துதல் தொடர்பில் சகல பற்றுச்சீட்டுக்கள் கோவையில் இணைக்கப்பட்டுள்ளதுடன், பயனாளிகள் உரிய உபகரணங்களைப் பெற்றுள்ளதை உறுதிப்படுத்தும் ஒப்ப ஏடும் கோவையில் இணைக்கப்பட்டுள்ளது.

(இ) **<u>சுய தொழில் உதவிகளை வழங்குதல்.</u>**

- நிதி கிடைக்கப் பெற்றுள்ளதை உறுதிப்படுத்தும் பற்றுச்சீட்டுக்கள் மொறவவ மற்றும் வவுனியா தெற்கு பிரதேச செயலகங்களிலிருந்து கிடைக்கப் பெறவில்லை என்பதுடன், ஏனைய சகல கிடைக்கப் பெற்ற பற்றுச்சீட்டுக்களும் கோவையில் இணைக்கப்பட்டுள்ளது என்பதைத் தயவுடன் அறியத் தருகின்றேன்.

27 நபர்களின் பின்னூட்டல் அறிக்கைகள் மட்டுமே கிடைக்கப் பெற்றுள்ளதுடன, இனிவருங் காலங்களில் அவற்றினைப் பெற்று தங்களுக்கு அறிக்கையிடுவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன்.

(ஈ) **பயிற்சி மற்றும் விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டங்கள்**

I. முதியோர்களுக்கான தேசியக் கொள்கையினைத் தயாரித்தல் 2015 ஆம் ஆண்டில் முன்வைக்கப்பட்ட பாதீட்டு முன்மொழிவொன்றாவதுடன் அது தொடர்பில் தேவையான ஒதுக்கீடுகள் 2016 ஆம் ஆண்டில் அமைச்சுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 2016.03.29 ஆந் திகதி இப்பணி முதியோர்களுக்கான தேசிய செயலகத்திற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரிய கொள்கைகளைத் தயாரித்தல் தொடர்பில் அடிப்படையில் நிறைவேற்ற வேண்டிய பணிகள் பாரியன என்பதால் உரிய பணிகள் முதியோர்களுக்கான தேசிய செயலகத்தினூடாக நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

திறைசேரியிலிருந்து அமைச்சுக்கு கட்டுநிதி வழங்கப்படும் வரையும் மற்றும் உரிய நிதி இவ்வலுவலகத்திற்கு மீளவும் வழங்கப்படும் வரையும் தற்காலிகமாக, உரிய செலவுகளை பயிற்சிகள் மற்றும் விழிப்புணர்வூட்டுதலின் கீழ் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன், நிதி கிடைக்கப் பெற்றதன் பின்னர் உரிய செலவுகளை மீளளிப்பதற்கு உரிய அக்கணக்குக்கு வரவிடப்பட்டுள்ளது. 2016.12.31 ஆந் திகதியளவில் அதனைச் சீர்செய்வதாகத் தயவுடன் அறியத் தருகின்றேன்

.

II. நாடுபூராவுமுள்ள சகல பிரதேச செயலகங்களையும் உள்ளடக்குமாறு மகளிர் அமைப்புக்கள் மற்றும் பாடசாலை மாணவர்களை விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

எனினும் திட்டமிடப்பட்டுள்ள நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்பில் 120 பிரதேச செயலகங்கள் மாத்திரம் உரிய பணியினைச் செய்வதற்கு மதிப்பீடுகளை முன்வைத்துள்ளதுடன், அந்த 120 பிரதேச செயலகங்கள் தொடர்பில் நிதி வழங்கப்பட்டு மேற்குறிப்பிட்ட நிகழ்ச்சித் திட்டங்களை முன்னெக்கப்பட்டு பின்னூட்டல் அறிக்கைகள் 100% திருப்தியளிக்கக்கூடிய வகையில் பணி பூர்த்தி செய்யப்பட்டிருந்தது.

எவ்வாறாயினும் அதன் ஒரு பிரிவினை முகாமை செய்யும் உத்தியோகத்தரின் பற்றாக்குறையின் கீழ் முதியோர்களுக்கான தேசிய செயலகத்தின் செயற்பாடுகளை சரியானவாறு நிறைவேற்றுவதில் சிக்கல் ஏற்பட்டதன் காரணமாக 211 பிரதேச செயலகங்களில் மேற்குறிப்பிட்ட நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துவதற்கு முடியாமற் போனது.

அதன் பிரகாரம் உரிய நிதியினைப் பயன்படுத்தி மேலும் பல நிகழ்ச்சித் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன், எதிர்வரும் காலங்களில் அந்தப் பிரிவின் வெற்றிடம் பூர்த்தியாக்கப்பட்டதன் பின்னர் சகல பணிகளையும் 100% நிறைவேற்றுவதற்கு முடியும் என்பதைத் தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன்.

III. இந்நூல்கள் 2016 ஆம் ஆண்டில் அச்சிடப்பட்டிருந்தும் அந்நூல்களில் உள்ளடக்கப்பட்டிருந்த ஆக்கங்களைப் பாராட்டுதல் 2017 ஆம் ஆண்டின் முதியோர் தினத்தினை ஒட்டி நடாத்தப்படுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதால் 2017

ஆம் ஆண்டின் செயற்பாட்டு அறிக்கையில் முன்னேற்றத்தினை உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாகத் தயவுடன் குறிப்பிடுகின்றேன்.

(உ) **முதியோர் பராமரிப்புச் சேவை**

- முதியோர் பராமரிப்புச் சேவை தொடர்பில் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டு பயிற்சியினைப் பெற்றுள்ள நபர்களின் எண்ணிக்கை, இவ்வருடத்தின் செயற்பாட்டு முன்னேற்றத்தில் உள்ளடக்கப்படும் எனவும், தேசியக் கொள்கையினைத் தயாரிக்கும் செயற்பாடுகள் இற்றை வரையில் இடம்பெற்று வருவதுடன், அதனை இறுதியான செயற்பாட்டு முன்னேற்றத்தில் உள்ளடக்குவதாகவும் தயவுடன் குறிப்பிடுகின்றேன்.

(ஊ) **முதியோர்கள் தொடர்பிலான தரவுகளை நாளதுவரைப்படுத்தல்.**

- உத்தியோகத்தர்களைப் பயிற்சியளித்தல் தொடர்பில் UNFPA நிறுவனத்தினால் நிதி, பல்கலைக்கழகத்திற்கு விடுவிக்கப்படாததால் தரவுகளை உள்ளடக்குதல் தொடர்பில் உத்தியோகத்தர்களைப் பயிற்சியளிப்பதில் தாமதமாகியுள்ளது. ஆதலால் பிரதமர் அலுவலகம், நிதி அமைச்சு, கொழும்புப் பல்கலைக்கழகம் மற்றும் UNFPA நிறுவனத்துடன் கலந்துரையாடப்பட்டது. இது தொடர்பில் இனிவருங் காலங்களில் நிதி அமைச்சின் இணக்கப்பாட்டின் கீழ் பயிற்சியளிக்கும் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படும் என்பதுடன் அதன் பின்னர் தரவுகளை நாளதுவரைப்படுத்தும் செயற்பாடுகள் இடம்பெறும்.

(எ) **முதியோர் தினத்தினை நடாத்துதல்.**

I. பிரதேச செயலகங்களினூடாக உறுதிப்படுத்துவதற்கான தகவல்கள் எமக்குக் கிடைக்கப் பெற்றுள்ளதுடன், இற்றை வரையில் உறுதிப்படுத்தலினை முன்வைக்காத பிரதேச செயலகங்களுக்கு கடிதங்கள் மற்றும் தொலைபேசியூடாக அறிவித்தல் இடம்பெற்றுள்ளதுடன், எதிர்வரும் காலங்களில் இத்தகவல்களைப் பெற்று விரிவான கணக்காய்வுக்கு முன்வைக்கின்றேன்.
II. இற்றை வரையில் நிகழ்ச்சித் திட்டங்கள் இடம்பெற்றது என்பதற்கு 75 அறிக்கைகள் கிடைக்கப் பெற்றதுடன், அறிக்கைகளை வழங்காத நிறுவனங்களுக்கு அறிக்கைகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளதுடன், அவ்வறிக்கைகளைக் பெற்று விரிவான கணக்காய்வுக்கு முன்வைப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாகத் தயவுடன் குறிப்பிட விரும்புகின்றேன்.
III. சர்வதேச முதியோர் தினத்திற்கென நடாத்தப்பட்ட ஞாபகார்த்த நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்பில் நாட்டிலுள்ள சகல மாவட்டங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தக்கூடியவாறு 1000 நிகழ்ச்சித் திட்டங்கள் நடாத்தப்பட்டன.

- இதில் வடக்கு கிழக்கினைப் பிரதிநிதித்துவப்படுத்திய தமிழ் மொழி கதைக்கும் 24 முதியோர்கள், அதற்கு மேலாக நுவரெலியா மாவட்டத்தின் பெரும்பான்மையினரும், மாத்தளை போன்ற மாவட்டங்களின் சிறுபான்மையினரும் தமிழ் மொழியினைக் கதைக்கும் தொகுதியினர் ஆவர். அதன் பிரகாரம் உரிய மொழி பெயர்ப்பு உபகரணங்களை மேற்குறிப்பிட்ட

முதியோர்கள் பாவிப்பதற்காக பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளதுடன், அரச மொழிக் கொள்கையினைப் பின்பற்றி இவ் உபகரணங்கள் பாவிக்கப்பட்டதாகத் தயவுடன் சுட்டிக் காட்ட விரும்புகின்றேன்.

**IV.** விற்பனை செய்யப்படாத கொடிகள் மற்றும் ஸ்ரிக்கர்களை அழிப்பதற்கான உரிய நடவடிக்கைகளை மிக விரைவில் நிறைவு செய்து தங்களுக்கு அறிக்கையிடுவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன்.

**V.** மீளாய்வு ஆண்டில் இலக்கிடப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களுக்கென செயற்பட்டபோது 100% ஐஎட்டிக் கொள்ளுவதற்கு முடியாமற் போனாலும்,

- முதுமை தொடர்பில் காலத்தின் வாதாட்டம்
- அச்சு ஊடகங்களில் அறிவித்தல்களை வெளியிடுதல் போன்றவற்றினை முன்னெடுப்பதற்கு நேரிட்டது.
- வானொலி மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சி திட்டங்கள்.

அதே போல ஒதுக்கப்பட்டிருந்த ஒதுக்கீடுகளை அடிப்படையாகக் கொண்டு,

முதியோர்களுக்கான தேசிய செயலகத்தின் கடமைப் பொறுப்புத் தொடர்பில் விரிவான நிகழ்ச்சித் திட்டமொன்றினை உருவாக்குவதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதே போல ஊடகங்கள் மற்றும் இலத்திரனியல் ஊடக வரையறைகளை கொள்வனவு செய்வதற்கு ஒதுக்கப்பட்டிருந்த ஒதுக்கீடுகள் போதாமையின் காரணத்தினால், உரிய ஊடக நிறுவனங்களின் நடுத்தரக் கால வரையறைகளில் அறவிடுதல் மிகவும் உயர்ந்த பெறுமதியாக காணப்பட்டது.

எவ்வாறாயினும் 2017 ஆம் ஆண்டில் ஊடக நிறுவனங்களுடன் தொடர்புபட்டு புதிய ஊடக நிகழ்ச்சித் திட்டங்களை உருவாக்குவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பதைத் தயவுடன் அறியத் தருகின்றேன்.

4.2. **<u>முகாமைத்துவ செயற்திறனின்மை</u>**

(அ) **<u>முதியோர்களுக்கான தேசியக் கொள்கைகளைத் தயாரித்தல்.</u>**

**I.** முதியோர்களுக்கென தேசியக் கொள்கையொன்றினைத் தயாரிப்பதற்கென திட்டமிடப்பட்டுள்ள காலவரைறை 2016 யூன் - 2016 திசம்பர் வரையாகும். இந்த 06 மாதங்களினுள் மாவட்டத்தின் சகல உத்தியோகத்தர்கள் தங்கள் பணிக்கு மேலாக இப்பணிக்குப் பங்களிப்பினை வழங்கியதன் மூலம் கொள்கையின் செயற்பாடுகள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

இதன் பெறுபேறு ஒன்றாக 2017.06.05 ஆந் திகதியளவில் பிரதான செயற்பாட்டுச் சபையின் இறுதி அறிக்கைகளைப் பெற்றுக் கொள்ளுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதுடன், இற்றை வரையில் அப்பணி நிறைவடைந்துள்ளது.

**II.** முதியோர்களுக்கான தேசியக் கொள்கையின் இறுதிக் கட்டச் செயற்பாடுகள் இற்றை வரையில் இடம்பெற்றுள்ளது. உரிய பணிகளை முன்னெடுத்தமைக்கு,

மொழிபெயர்ப்புக் கட்டணங்கள், அச்சு ஊடகங்கள் மற்றும் இலத்திரனியில் ஊடகக் கட்டணங்கள், வெளியீட்டுக் கட்டணங்கள், இறுதி வெளியீட்டுக் கட்டணங்கள் மற்றும் கொள்கையினை அறிமுகஞ் செய்தற் கட்டணங்களாக இனிவருங் காலங்களில் முதியோர் கொள்கைக்கென ஈடுசெய்யப்பட வேண்டிய செலவுகளுக்கென அமைச்சினூடாகக் கிடைக்கப் பெற்ற நிதியில் ரூபா. 1,694,164/- நிதி பல்வேறான வைப்புக் கணக்கில் தேங்கியுள்ளது என்பதைத் தயவுடன் குறிப்பிடுகின்றேன்.

(ஆ) இது தொடர்பில் தற்போது செலவினைச் செய்தல் நிறுத்தப்பட்டுள்ளதுடன், அவ்வழக்குத் தீர்ப்புக்கமைய இனிவருங் காலங்களில் நடவடிக்கை எடுக்கின்றேன்.

4.3. **<u>உத்தியோகத்தர் குழாம்</u>**

- வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வரப்படுகின்றது என்பதைத் தயவுடன் அறியத் தருகின்றேன்.

4.4. **<u>செயற் திறமையின்மை</u>**

(அ) இந்நிதிச் செலவுகளை ஈடுசெய்வதற்கு இற்றை வரையில் சட்டங்கள் மற்றும் ஒழுங்கு நெறி தயாரிக்கப்பட்டிருந்தும் நிர்வாக சபையினால் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. 2017 மே மாதம் நடாத்தப்பட்ட சபையினூடாக அடுத்துவரும் சபைக்கு மேலதிக ஆய்வுக்கென முன்வைக்கப்பட்டுள்ளதால் சட்டங்கள் மற்றும் ஒழுங்கு நெறி அங்கீகரிக்கப்பட்டதன் பின்னர் செலவினைச் செய்வதற்கு தேவையான நடவடிக்கையினை எடுக்கின்றேன்.

(ஆ) மீதியாகியுள்ள நிதியினை இவ்வருடத்தில் பகிர்ந்தளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(இ) இவ் வைப்பு நலன்புரி நிதியத்திற்கு முன்வைக்கப்பட்டுள்ளதுடன் அதன் வருடாந்த வட்டியினை புற்றுநோய் உதவிகள் வழங்குவதற்கு முன்வைக்கப்பட்டுள்ளது என்பதைத் தயவுடன் குறிப்பிடுகின்றேன்.

4.5. **<u>முறைசார் வகையில் ஒப்படைக்கப்படாத காணிகள் மற்றும் கட்டிக் கருத்திட்டங்களை ஆரம்பித்தல்.</u>**

- கதிர்காமம் முதியோர் இல்லம் மற்றும் வழிகாட்டல் நிலையத்திற்கு உரித்தான காணி இற்றை வரையில் நில அளவைத் திணைக்களத்தினூடாக அளவீட்டுச் செயற்பாடுகள் இடம்பெற்று நில அளவை வரைபடம் வழங்கப்பட்டுள்ளதாகவும், அக்காணியினை ஒப்படைப்பதற்கான செயற்பாடுகள் இற்றை வரையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்பதைத் தயவுடன் எடுத்துக் காட்ட விரும்புகின்றேன்.

5. **<u>கணக்கீட்டுச் செயற்பாடுகள் மற்றும் நல்லாட்சி</u>**

5.1. **<u>கூட்டுத் திட்டம்</u>**

- 2016 ஆம் ஆண்டிலிருந்து 05 வருட கால வரையறை தொடர்பில் கூட்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது என்பதைத் தயவுடன் சுட்டிக் காட்ட விரும்புகின்றேன்.

5.2. **<u>செயற்பாட்டுத் திட்டம்</u>**

- எதிர்வரும் வருடத்தின் செயற்பாட்டுத் திட்டத்தினைத் தயாரிக்கும்போது ஒவ்வொரு வருடத்திற்குமென செயற்பாட்டுத் திட்டத்தினைத் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன்.

5.3. **<u>பாதீட்டினை முகாமை செய்தல்.</u>**

- நிதி அமைச்சினால் ஒதுக்கப்பட்ட பாதீட்டு வரையறைகளின் கீழ் தேசிய சபையின் அங்கீகாரத்துடன் ஒவ்வொரு செலவு விடயங்களுக்குமென நிதி ஒதுக்கப்பட்டுள்ளதுடன், வருட நிறைவில் ஒதுக்கீடுகள் மீதியாகும் என்ற எதிர்பார்ப்புடனும் மற்றும் காணாமற் போகும் என்ற எதிர்பார்ப்புடனுமான செலவு விடயங்கள் என்பதுடன் சபையின் அங்கீகாரத்துடன் மாற்றுவதனூடாக பாதீட்டு வரையறைகளை மாற்றி செலவுகளைச் செய்வதற்கு அங்கீகாரம் கிடைக்கப் பெற்றுள்ளதுடன், அவ் அங்கீகாரத்தின் கீழ் செலவு ஈடு செய்யப்படுகின்றது என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகின்றேன்.

6. **<u>திட்ட முகாமை</u>**

(அ), (ஆ). (இ). (அ)

- திட்ட முகாமை தொடர்பில் கணக்காய்வினால் முன்வைக்கப்பட்ட புலனாய்வின் மீது அதிக கவனஞ் செலுத்தப்பட்டுள்ளதுடன், அவற்றினை மேலும் முறைசார்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கை எடுத்துள்ளேன் என்பதை அறியத் தருகின்றேன்.

**சுவிந்த எஸ். சிங்கப்புலி,**
பணிப்பாளர்.